எண்:5/PBCWWB/Schemes-Edn./2013

புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம்

D1-தொழிற்பேட்டை, 4வது குறுக்குத் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி 605009.

# அறிவிப்பு

புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பயனாளிகளின் பிள்ளைகளை உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் நோக்கோடு, புதுச்சேரி அரசு, தொழிலாளர் துறை அரசாணை G.O.Ms.No.5/LAB/LO(T)/2013 நாள்: 23.01.2013ன் படி பணப்பயன்/ நிதிஉதவி கீழ்க்கண்ட வகையில் வழங்க இவ்வாரியம் முடிவு செய்துள்ளது.

**பிரிவு-I:**

**2012–13** ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை படிப்பு (+2) அல்லது அதற்கு சமமான பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற பயனாளிகளின் பிள்ளைகளுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு வழங்கப்பட உள்ளது.

(அ) புதுச்சேரி மாநில அளவில்:

| | |
|---|---|
| 1. முதல் பரிசு | ரூ.50,000/– |
| 2. இரண்டாம் பரிசு | ரூ.40,000/– |
| 3. மூன்றாம் பரிசு | ரூ.30,000/– |

(ஆ) பிராந்திய அளவில்: [ஒவ்வொரு பிராந்தியத்திலும் (புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம்) தனத்தனயாக].

| | |
|---|---|
| 1. முதல் பரிசு | ரூ.30,000/– |
| 2. இரண்டாம் பரிசு | ரூ.20,000/– |
| 3. மூன்றாம் பரிசு | ரூ.10,000/– |

**பிரிவு-II:**

**2013–14**ஆம் கல்வி ஆண்டில் புதுச்சேரி அரசு சென்டேக் (CENTAC) மூலம் மருத்துவம்/ பொறியியல் பயில ஒரு முறை நிதி உதவி:

| | |
|---|---|
| (அ) மருத்துவம் (M.B.B.S/B.D.S) | ரூ.50,000/– |
| (ஆ) பொறியியல் (B.E./B.Tech) | ரூ.25,000/– |
| (இ) பொறியியல் பட்டயப்படிப்பு (Dip.in Engg.) | ரூ.10,000/– |

**பிரிவு-III:**

**2013–14**ஆம் கல்வி ஆண்டில் பட்டப்படிப்பு/பட்டமேற்படிப்பு/பட்டயப்படிப்பு/பட்டய மேற்படிப்பு பயில வருடாந்தர கல்வி உதவி

| | |
|---|---|
| (அ) பட்டப்படிப்பு (மருத்துவம்/ பொறியியல் நீங்கலாக) | ரூ.1,000/– |
| (ஆ) பட்டமேற்படிப்பு | ரூ.2,000/– |
| (இ) பட்டயப்படிப்பு (பொறியியல் நீங்கலாக) | ரூ.1,000/– |
| (ஈ) பட்டய மேற்படிப்பு (PG Diploma) | ரூ.1,500/– |

மேற்கண்ட பணப்பயன்/ நிதிஉதவியை பெறுவதற்காக பயனாளிகள் உரிய விண்ணப்பத்தை இவ்வாரியத்தின் பிராந்திய (புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம்) அலுவலங்களில் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **30.09.2013**குள் உரிய சான்றிதழ்களுடன் அந்தந்த பிராந்திய வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விண்ணப்பங்களை **http://labour.pondicherry.gov.in** என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

G. ஸ்ரீநிவாஸ்

இடம்: புதுச்சேரி

செயலர் (நலவாரியம்)

நாள்: **28.08.2013.**